பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ஆண்டு மார்கழி மீ 1960 டிசம்பர் மீ | பகுதி 9

பொருளடக்கம்

	பக்கம்
பத்திராதிபர் குறிப்புகள் ...	155
நாம் விரும்பும் சீதோஷ்ண நிலை ...	156
குழந்தைகளைப் பள்ளியின் பெருமை கூறி பள்ளிக்கு அழைத்தல் ...	158
புதுச் சம்பள திட்டம் ...	159
தென் இந்திய ஆசிரியர் சங்கம்—கல்வி வார விழா ...	160
கடலைச் சுத்தம் செய்தல் ...	161
அம்மானை ...	162
பாண்டி ...	162
செய்தித் திரட்டு ...	163

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி .25 ந.பை.

பாலர் கல்வி

தொகுதி 25 | சார்வரி ஞு மார்கழி மீ 1960 டிசம்பர் மீ | பகுதி 9

பத்திராதிபர் குறிப்புகள்

வரவேற்கிறோம்

14-11-1960 தேதியிட்ட G.O. நெ 2386 இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி 1-4-1955-க்கு முன்பு 55 வயது முடிந்த ஆசிரியர்கள் 1-4-1955-ல் வேலையிலில்லாமலிருந்து, அதற்குப் பிறகு வேலையிலிருந்திருந்தால் பென்ஷன் பெறலாம் என்று உத்தரவாகியிருக்கிறது. இதை வரவேற்கிறோம். இப்பொழுது 1-4-1955 அல்லது அதற்குப் பிறகு ரிடையரான எல்லா ஆசிரியர்களுக்கும் பென்ஷன் வசதி கிடைத்துவிட்டது. 1-4-1955க்கு முன்பு ரிடையராகி உயிருடன் வாழும் ஆசிரியர்கள் வெகு சிலரே இருப்பார்கள். இவர்கள் விஷயத்தில் சர்க்கார் பரிசீலித்து வரும் திட்டப்படி பென்ஷன் உத்திரவை பிறப்பிப்பார்களென நம்புகிறோம்.

புதுச் சம்பள நிர்ணயம்

G.O. 710 dated 10-7-1960 பிரகாரமும் G. O. 2033 dated 24-9-1960 பிரகாரமும் ஆசிரியர்களுக்குச் சம்பள நிர்ணயம் செய்யப்படவேண்டிய புதுச் சம்பளம் ஆசிரியர் கைக்கு எட்டவில்லை. பல ஆசிரியர்களிடமிருந்து weightage விஷயமாய்க் கடிதங்கள் சங்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. Minimum Scale சம்பளத்திற்கு மேல் மொத்தத்தில் 25 ரூ. அதிகரிப்பு வரை weightage மூன்று வருஷத்திற்கு ஒரு சம்பள உயர்வு புது ஸ்கேலில் உண்டு என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கிறோம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் செய்தது போல ஆசிரியர்கள் விஷயத்திலும் சீக்கிரத்தில் 1960 டிசம்பர் முடிவிற்குள்ளாவது புதுச் சம்பளம் சேரும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1959-60 வருட வேலைக்குச் சம்பள உயர்வு

பொதுவாக பெரும்பாலான ஆசிரியர்கள் விஷயத்தில் ஜூன், ஜூலை மாதங்களில் சம்பள உயர்வு இருந்துவந்திருப்பதாலும், பள்ளிகளில் வேறு மாதங்களில் சம்பள உயர்வு இருக்கக் காரணமில்லாததாலும், 1960 மேமீ 31வ- சம்பளத்தின் பேரில் புதுச் சம்பளம் கணக்கிடுவதில் 1959-60 வருட வேலைக்குச் சம்பள உயர்வு கிடைக்கவழியில்லை. இக்காரணத்தைக் கொண்டு, ஆசிரியர்கள் விஷயத்தில், சம்பளத் திட்டக் கமிஷன் சிபாரிசுகளின் நன்மைகளைத் தவிர, இந்த 1959-60 வருட வேலைச் சம்பள உயர்வைப் பிரத்தியேகமாக அளிக்கும்படி சர்க்காரை வேண்டுகிறோம்.

புதுச் சம்பளத் திட்டமும் வருட உயர்வும்

லோயர், ஹையர் கிரேடு ஆசிரியர்கட்கு வருட உயர்வை ரூபாய் மூன்றுகவும், செகண்டரி கிரேடு வருட உயர்வை நாலு ரூபாயிலிருந்து மூன்று ரூபாயாகக் குறைக்காமல், எட்டு ரூபாயாகச் செய்யும்படியும் யூனியன் வேண்டிக்கொண்டதை மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

யூனியன் விசேஷ மகாநாடு

யூனியன் விசேஷ மகாநாடு தஞ்சையில் 30-12-1960(வெள்ளிக்கிழமை) நடக்கவிருக்கிறது. இம்மகாநாடு ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய வீட்டு வாடகைப்படி, வைத்தியச் சலுகை, பென்ஷன், கிராக்கிப்படி விஷயமாகப் பொது ஜன ஆதரவிற்காகக் கூட்டப்படுகிறது. ஆரம்ப ஆசிரியர்கள் இம்மகாநாட்டிற்

குத் திரளாக வரும்படி வேண்டுகிறோம். பிரதிநிதி கட்டணம் கிடையாது.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நமது சர்க்கார் திட்டமிட்ட 398 கோடி ரூபாய் சுமார் நூறு கோடி ரூபாய்க்கு மேல் இந்திய சர்க்கார் அளவில் குறைக்கப்பட்டிருக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தையும், அதற்கு முதல் ஸ்தானம் அளிக்க வேண்டிய அவசியத்தையும் கருதி, கல்வித் திட்டம் இதனுல் பாதிக்கப்படாமலிருக்குமென்று நம்புகிறோம்.

கல்வி வாரம்

7-11-1960 கல்வி வாரத்தை நமது முதன் மந்திரி கனம் கே. காமராஜ் அவர்கள் துவக்கிவைத்தார். இவ்வாரக் கொண்டாட்டத்தின் விவரம் இந்த இதழில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

நாம் விரும்பும் சீதோஷ்ண நிலை!

வாநிலையில் நாம் எதிர்பாராத எத்தனையோ நிகழ்ச்சிகள் ஏற்படலாம். மனித சரித்திரம் துவங்கிய நாள் முதலே, வாநிலை ஆராய்ச்சியாளர் வாநிலையின் போக்கைப் பற்றி இயன்றளவு துல்லியமாக ஹேஷ்யம் கூறுவதற்கு முயன்று வந்திருக்கிருர்கள். ஆயினும் கொஞ்ச காலமாக ஜெர்மனியிலும், வேறு பல நாடுகளிலும் மனிதர்கள் வாநிலைப் போக்கில் குறுக்கிட ஆரம்பித்திருக்கிருர்கள். இந்தப் புதிய பொழுது போக்கு, "மைக்ரோ க்ளைமடாலஜி" என்னும் புதியதொரு விஞ்ஞான சாஸ்திரம் பற்றிய அறிவை அடிப்படையாய்க் கொண்டதாகும். வாநிலை ஆராய்ச்சியில் ஓர் உட்பிரிவான இந்த அறிவை, முன்பெல்லாம், தாவரங்கள், பிராணிகள் சம்பந்தமாகவும், விளை நிலம், சாகுபடி நிலைமைக் கூறுகள் ஆகியவை சம்பந்தமாகவுமே பயின்று வந்தார்கள். கிட்டத்தட்ட முப்பதாண்டுகளுக்கு முன் ருடால்ஃப் கெய்கர் என்னும் ம்யூனிக் நகரப் போராசிரியர்தான் முதன் முதலாக இந்த மைக்ரோ க்ளைமடாலஜி என்னும் சித்தாந்தத்தை ஆராய்ந்தார். அவர் கண்டுபிடித்த உண்மைகளே வனவள ஆராய்ச்சி நிபுணர்களும், சாலை எஞ்சினியர்களும் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். இந்த விஞ்ஞானத் துறையில் மேல் ஆராய்ச்சியும், அபிவிருத்தியும் ஜெர்மனியில் நடந்தது. நுண் சூழ்நிலை ஆராய்ச்சி என்னும் சாத்திரம், தரைக்கு மிக சமீபத்தில்—அதாவது ஆறேழு அடி உயரத்துக்குள் இருக்கும் வாயுவின் சீதோஷ்ண நிலை பற்றியது. சிறு சிறு பகுதிகளில் இந்த வாயுவின் நிலையை ஆராய்கிருர்கள். சீதோஷ்ண நிலை பற்றிய வழக்கமான புள்ளி விவரங்களிலிருந்து அலாதியாக, தனியாக இந்த ஆராய்ச்சி மூலம் புள்ளி விவரங்கள் கிடைக்கின்றன. இந்த விவரங்களில் ஒருவிதத் தனித் தன்மை இருக்கிறது. வன்மையான உஷ்ண மாறுபாடுகளும், காற்றில் அதிகமான நீர்ப் பசையும், குறைவான காற்று வேகமும் இதன் சிறப்பம்சங்கள். இந்த ஒவ்வொரு அம்சமும், அந்தந்த நிலப் பாங்கையும், மண் இயப்பையும், தாவர வளத்தையும் சார்ந்திருக்கிறது.

சமீப காலத்தில், இந்த ஆராய்ச்சி, பல்வேறு ஸ்தலக் காற்று வீச்சுக்களின் விஷயத்திலும், "காற்றுக் கால்வாய்கள்" காற்றுத் திருப்பங்கள், குளிர்ந்த வாயுத் திட்டுக்கள் ஆகியவற்றின் விஷயத்திலும் முறையாக விருத்தியடைந்து வந்திருக்கிறது; வீடுகளின் சுற்றுப்புறங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் கூட இதைப் பயின்று வந்திருக்கிருர்கள். பழைய வீடு ஒவ்வொன்றும், புதிய புல்வெளி ஒவ்வொன்றும் உஷ்ண நிலையையும், காற்றமுத்த மாறுபாடுகளையும், காற்று வீச்சையும் பாதிக்கிறது. மிக நுண்ணிய காற்றுமானிகள், புகைப் பானைகள், சோப்புக் கொப்புளக் குழாய்கள், விசேஷ உஷ்ணமானிகள்—இவையெல்லாம், ஒவ்வொரு தனி வீட்டுச் சொந்தக்காரரும், இந்த சொந்த வாநிலை அமைப்புத் திட்

டத்தில் சுலபமாகக் கையாளக்கூடிய கருவிகளாகும்.

மைக்ரோ க்ளேமடாலஜி என்னும் சாத்திரத்தை அன்ருட வாழ்க்கையில் பயின்ருல், தனி வீடுகளில் ஏற்படும் சீதோஷ்ணக் கோளாறுகளேக் குறைக்க லாம். ஈரச் சுவர்கள், குளிர்ந்த சுவர் கள், காற்றுச் சுழல்கள், புழுதிப் படலங் கள், வறண்ட புல் வெளிகள் முதலிய எத்தனேயோ பிரச்னேகளே இதன் மூலம் தீர்க்க முடியும். சொந்தமாக வாநிலே உருவாக்க விரும்பும் ஒவ்வொருவரும், வெற்றிப் பலன் காண வேண்டுமாளுல் பின்வரும் விதிகளேப் பின்பற்ற வேண் டும்: காற்றை நிரந்தரமாகக் கட்டு திட் டம் செய்வதும், உஷ்ணம் சிதறச் செய் யும் கருவிகளேயும், சூரியனே மறைக்கக் கூடிய கூரைகளேயும் அமைப்பதும் முக் கியம். வாயுக் கட்டுப்பாடு என்பது வேலிகளும், எல்லேப் புதர்களும் அமைப் பதால் சாத்தியமாகும்; இவை சிறுசிறு ஸ்தலக் காற்று வீச்சுக்களேக் கட்டுப் படுத்தி, ஒரு குறிப்பிட்ட வழியில் செலுத்துகின்றன. ஒவ்வொரு தோட் டத்திலும் வீசும், குளிர்ச்சியான, வெது வெதுப்பான காற்றுக்கள் போன்ற வெவ் வேறு காற்றுப் பாய்ச்சல்களேயும் கண்டு பிடிப்பதற்கு, ஒருமுறை இருக்கிறது. எந்தத் தடையையும் சமாளித்துக் கொண்டு, தண்ணீர் போல் பாய்ந் தோடும் இந்தக் காற்று வகைகளேக் கண்டு பிடிப்பதற்கு, உலர்ந்த கட்டை யைப் பானேகளில் போட்டு எரிக்கிருர் கள்; அவற்றிலிருந்து புகை கிளம்பு கிறது; அந்தப் புகைப் பானேகளே ஆராய்ச்சி ஸ்தலத்தின் பல்வேறு இலக்குகளிலும் வைக்கிருர்கள். புகை யின் போக்கு, குளிர் காற்றுப் பாய்ச்சல் களின் போக்கைக் காட்டுகிறது. இந்தத் தந்திரத்தால், ஜெர்மனியின் அமெச்சூர், சீதோஷ்ண ஆராய்ச்சியாளர் ஒருவர், தமது மனேக்கு வெளியே ஒரு பள்ளத் தாக்குக்குள் பாய்ந்து கொண்டிருந்த குளிர் காற்றுக் கால்வாய் ஒன்றை வசப் படுத்திக்கொண்டார். அவர் ஒரு வேலிப் புதர் வைத்து இதை சாதித்தார். இந்தக் குளிர் காற்றை அவர் ஒரு வகை குளிர்ப் பதன சாதனமாகப்பயன்படுத்திக்கொண் டார். அவர் இந்தக் காற்றை, தமது வீட் டின் முன் வாயில் வழியாகத் திருப்பி விட்டார். இதனுல், கடும் கோடை நாட் களின் உஷ்ணம் அந்த வாயில் பகுதி யில், முன்னேவிட கிட்டதட்ட 10 சென். குறைந்துவிட்டது.

யாருடைய வீட்டின் சுற்றுப்புறத்திலா வது கடும் வேகத்தில் காற்றடித்துக் கொண்டிருக்கிறது என்ருல், சுழலும் கம்பங்கள் கொண்ட வேலி ஒன்றை காற்றின் திசையறிந்து அமைத்தால் போதும்; உடனே காற்று வேறு திசை யில் அடிக்க ஆரம்பித்துவிடும். உஷ் ணத்தைச் சிதறச் செய்யும் கருவிகள் இன்னெரு முக்கிய அம்சம். உஷ்ணம் மிக்க நாட்களில், சூரிய அஸ்தமனத் துக்குப் பிறகும், இருண்ட மாடங்களி லிருந்து கடும் உஷ்ணம் வெளிப்படு கிறது. கரிய வர்ணங்களெல்லாம் சூரிய உஷ்ணத்தை உறிஞ்சிக்கொள்கின்றன என்பது உண்மையே. ஆயினும், சுவர் களில் வெளிறிய வர்ணங்கள் பூசுவது தவறு; ஏனென்ருல் பளிச்சென்ற வர் ணங்கள் உஷ்ணத்தை உறிஞ்சிக்கொள் ளாமல் அதை வன்மையாகப் பிரதி பலித்துவிடுகின்றன. தோட்டம் வளர்ப் பவர்கள், சூரிய ஒளிபடும் பகுதியில், வெளிறிய வர்ணக் கற்களால் பாதை அமைத்தார்களேயாளுல், அதற்கு எதிர்த் தாற் போலுள்ள வீட்டு அறைகள், கோடை காலத்தில் தாங்க முடியாதபடி சூடேறிவிடுவதைக் காண்பார்கள். மைக்ரோ-க்ளேமடாலஜி ஆராய்ச்சியின் விளேவுகளேக் கொண்டு பார்க்கும்போது, புல்தான் மிகக் குளிர்ச்சியான இயல்பு கொண்டது என்பது புலனுகிறது. எனவே, மாடங்களும், அறைகளும் அருகே புல்வளருவதற்கு அனுமதிப் பவையாக அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாருக விஞ்ஞானம்; மனிதனின் சூழ்நிலேயை மாற்றுவதற்கு மனிதன் தன் வீட்டின் சீதோஷ்ண நிலேயை மாற்றிக் கொள்வதற்கு இன்னெரு வாய்ப்பைக் காட்டியிருக்கிறது.

—'இன்ட்ரா'

குழந்தைகளைப் பள்ளியின் பெருமை கூறி பள்ளிக்கு அழைத்தல்

(பல்லவி)

என்ன விநோதம் பாரு
எவ்வளவு ஜோக்கு பாரு (என்ன)

சரணங்கள்

(1) பள்ளிக்கூடம் போயிப் பாரு
பாடம் நல்லாக் கேட்டுப்பாரு
நல்ல வாத்தியாரு கூட
நயமாகப் பழகிப்பாரு. (என்ன)

(2) பான, டான, ம் மன்ன
படம், பட்டம், படிச்சுப்பாரு
பகுத்தறிவை, விளக்க நல்ல
கதையைக் கொஞ்சம் கேட்டுப்பாரு (என்ன)

(3) ஆட்டங்களும் பாட்டங்களும்
அங்கே நடக்கும் ஜோரு பாரு
தோட்டம் போட்டுக் காய் கறிகள்
பயிர்கள் செய்யும் அழகைப்பாரு (என்ன)

(4) காலையிலே கடவுள் வணக்கம்
மாலையிலே விளையாட்டு
காலமெல்லாம் பிழைக்க நல்ல
கைத்தொழிலைப் பழகிப் பாரு (என்ன)

(5) ஔவையார் அருளிச் செய்த
ஆத்திசூடி நீதி நூல்கள்
செவ்வையாகப் படிச்சி நல்ல
சீருடனே நடந்து பாரு. (என்ன)

(6) பூகோளம் சரித் திரம்
பொது அறிவு விஞ்ஞானம்
நீகேட்டு உலக நடை
அனுசரித்து நடக்க வேணும். (என்ன)

(7) நல்ல படியாய்ப் படிச்சி
நம்ப சமூகம் வளர
நாட்டிலுள்ள பிள்ளை யெல்லாம்
பள்ளிக் கூடம் போக வேணும். (என்ன)

(8) அருமையானத் தாயி தந்தை
அனைவருமே இதைக் கேட்டு
அன்பாகப் பள்ளிக் கூடம்
அனுப்பிவைக்க வேணுமப்பா. (என்ன)

—ராகவேந்திர ராவ்

புதுச் சம்பள திட்டம்

G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.

புதுச் சம்பளத் திட்டம் ஆசிரியர்கள் விஷயத்தில் அமுலுக்குக் கொண்டுவருவதில் சில முக்கிய அம்சங்கள் கவனிக்கப் படவேண்டிய அவசியம் உண்டு.

ஆசிரியர்களில் பலதரப்பட்ட நிர்வாகங்களில் வேலை செய்தவர்களுண்டு. ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத்து நிர்வாகத்திலிருந்து உதவிபெறும் நிர்வாகப் பள்ளிகளுக்கு வேலைக்கு வந்திருக்கலாம். உதவிபெறும் பள்ளிகளிலிருந்து லோகல் போர்டு பள்ளிகளுக்குப் போயிருக்கலாம். உதவிபெறும் பள்ளிகளிலேயே வேலை நிரந்தரம் இல்லாததால், பல பள்ளிகளில் வேலை செய்திருக்கலாம். ஆசிரியர்களுக்கு யோக்கியதாம்சத்தை அபிவிருத்தி. செய்து கொள்ள வாய்ப்புகளிருப்பதால் ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடாக பலர் மாறினவர்களுண்டு. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஆரம்பப்பள்ளியிலும், மத்தியதரப் பள்ளியிலும் (*Secondary*) வேலை செய்யலாமென்றிருப்பதால், சில வருடங்கள் அங்கும், சில வருடங்கள் இங்குமாக வேலை செய்தவர்களுண்டு. ஆசிரியர் சம்பளம் மாற்றியமைக்கப்பட்டு வந்திருப்பதால், பல ஸ்கேல்களில் சர்வீசு இருந்து வந்திருக்கிறது. இவைகளையெல்லாம் மொத்த சர்வீசாகப் பென்ஷன் விஷயத்திற்கு எடுத்துக் கொள்வது போல் எடுத்துக்கொண்டு (weightage) கொடுக்கப் படவேண்டும். இதைத்தான் சர்க்காரும் செய்வார்களென்று நம்பிக்கையுண்டு. ஆனால், சம்பள நிர்ணய விஷயம் பலஅதிகாரிகள் சேர்ந்து செய்யவேண்டிய விஷயமாயிருப்பதால், எல்லா சர்வீசும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற தெளிவாக சர்க்கார் உத்திரவு அவசியமெனத் தோன்றுகிறது. அனுபவமுள்ள ஆசிரியர்களுக்கும் 4 வருட உயர்வுக்குமேல் கொடுக்க G.O. இடம் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட 4 உயர்வுகளாவது கிடைத்தால்தான் சர்வீசான வயதான ஆசிரியர்கட்கும், புதிதாக உத்தியோகத்திற்கு வரும் ஆசிரியர்கட்கும் நியாயமான சம்பள வித்தியாசம் கிடைக்கும். இதுவே சர்க்காரின் திட்டமாகும்.

ஆசிரியர்கட்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குமுள்ள இந்த வேறுபாட்டின் காரணமாக, எந்தப் பள்ளியில் வேலை செய்திருந்தாலும், எந்த Grade-ல் வேலை செய்திருந்தாலும், எந்த நிர்வாகத்தின் கீழ் வேலை செய்திருந்தாலும் எந்தெந்த Scale-ல் வேலை செய்திருந்தாலும், பென்ஷனுக்கு எடுத்துக் கொள்வதுபோல, ஆசிரியரின் மொத்த சர்வீசைஎடுத்துக்கொண்டு weightage கொடுக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்திரவிடுதல் அவசியமெனத்தெரிகிறது.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு (Places) ஸ்தானங்களில் இருப்பவர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கப்படவேண்டும். இல்லாவிடில், ஒரே யோக்யதாம்சமுள்ள ஆசிரியர்களுக்கு ஒரேசம்பளம் என்ற நியாயம் இவர்களுக்குக் கிட்டாது. சம்பளக் கமிஷன் சிபார்சுகளின் பூரா நன்மை இவர்களுக்குக் கிடைக்கும்படி எந்த வகுப்பில் வேலை செய்தாலும், எந்தஸ்தானத்தில் வேலை செய்தாலும், செகண்டரி கிரேடு ஆசிரியருக்குச் செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கும்படி சர்க்கார் உத்திரவிடுவது அவசியம்.

1-6-1959-ல் சம்பளவசூல் பள்ளிகள், சம்பள வசூல் செய்யாத பள்ளிகளென உதவிபெறும் ஆரம்பப்பள்ளிகள் பிரிக்கப்பட்டபோழுது வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் ஹையர்கிரேடு ஸ்தானத்தில் வேலை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. இவர்களுக்கும் செகண்டரி கிரேடு சம்பளம் கொடுத்தாலொழிய புதுச் சம்பளத் திட்டத்தின் நன்மை கிடைக்காது.

1-6-1959-ல் சர்க்கார் நேரடிச் சம்பளம் சுமார் 1000 உதவி பெறும் ஆரம்பப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கட்குக் கொடுக்க ஆரம்பித்தார்கள், அக்காலத்தில் சர்வீஸ் ரிஜிஸ்தரிலுள்ளபடி சம்பளம் கொடுக்கப்படாமல் சர்க்கார் ஸ்கேல் ஒன்று கணக்கிட்டு சம்பளம் குறைக்கப்பட்டது. இவர்கள் விஷயத்திலும், புதுச்சம்பளத்திட்டப் பூரா பயன் கிட்டவேண்டுமானால், சர்வீஸ் ரிஜிஸ்தர் சம்பளம் ஒப்புக்கொள்ளப்பட்டு, அதன் பேரில் புதுச் சம்பளம் கணக்கிடப் படவேண்டும்.

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

கல்வி வார விழா

30-வது தென்னிந்தியக் கல்வி வார விழா நமது முதல் மந்திரி கனம் கே. காமராஜ் அவர்கள் தலைமையில் 7-11-1960-ல் சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து உயர் தரப்பள்ளியில் துவக்கி வைக்கப்பட்டது.

யூனியன் தலைவர் திரு. ஜி. கிருஷ்ண மூர்த்தி, எம். எல். சி. கல்வி வாரத்தின் இலட்சியத்தைக் குறித்துப் பேசுகையில், கல்வியின் தரம் உயர வேண்டுமென்றும், கல்வி திட்டம் தேசீயமயமாக்கப்படவேண்டுமென்றும் சொன்னார். மூன்றும் ஐந்தாண்டு திட்டத்தில் ஆசிரியர் குறைந்த பட்ச சம்பளத்தை நூறு ரூபாயாக்கவும், வீட்டு வாடகை, வைத்தியச் சலுகை, பென்ஷன், கிராக்கிப்படி கொடுக்கவும் வருடம் மூன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்படவேண்டுமென்றும்வேண்டிக்கொண்டார். ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்லூரியில் படிப்பதற்கு இலவச வசதி தேவை யென்றும் சொன்னார்.

முதல் மந்திரி அவர்கள் முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களும் வெற்றிகரமாக நடத்தப்பட்டதிலிருந்து மூன்றும் திட்டமும் வெற்றிகரமாக நடக்குமென்று தான் நம்புவதாகவும், பொதுமக்கள், அதுவும் கிராமப் பகுதிகளிலுள்ள பொதுமக்கள் கல்வியில் உற்சாகம் காண்பிப்பது தனக்கு சந்தோஷத்தை யளிப்பதாகவும் சொன்னார். அவர்கள் ஏழ்மை நிலைக்காரணமாகத் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி யளிக்க வசதியற்றவர்களாயிருக்கிறார்கள். சர்க்கார் முழுப் பொறுப்பையும் ஏற்று கட்டாயக் கல்வி திட்டத்தை அமுல் நடத்த முன் வந்திருக்கிறது. அதிக எண்ணிக்கையில் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட முன்வருவதில் கல்வித்தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிடில், கல்விக்குச் செலவிடும் பணம் பூராவும் வீணாகும். பாடபுத்தகங்கள் தேசீயமயமாக்கப்பட வேண்டுமென யூனியன் தலைவர் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதற்கு மாறாக பல அபிப்பிராயங்கள் வரலாமென்பதை அறியவேண்டும் இருந்தபோதிலும் இவ் விஷயத்தில் ஏதாவது செய்தாக வேண்டும்.

ஆசிரியர்கள் முற்காலத்திலிருந்தே மரியாதையுடன் நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கு நல்ல நடத்தை உண்டாக்கும்படி ஆசிரியர்கள் நடந்து கொள்ளவேண்டும். ஏழைக் குழந்தைகளைப் பெற்றோர்கள் வீட்டில் கவனிக்க முடியாது. அவர்கள் விஷயத்தில், ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று கூறினார்.

விழாவைத் துவக்கிவைத்த பாராளுமன்ற உறுப்பினர் திரு சி. ஆர். பட்டாபிராமன் மூன்றும் திட்டத்தில் அரசாங்கம் செய்யவிருக்கும் கல்வி அபிவிருத்தித் திட்டங்களை புள்ளி விவரத்துடன் எடுத்துரைத்தார்.

காரியதரிசி திரு. எஸ். டி. கிருஷ்ண மூர்த்தி ராவ் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

காரியதரிசி

காஞ்சீபுரம் ஆசிரியர் சங்கம்

காஞ்சீபுரம் ஆண்டர்ஸன் உயர்தரப் பள்ளியில் திரு. சிம்ஸன் ராஜரத்தினம் தலைமையில் யூனியன் தலைவர் ஜி.கிருஷ்ண மூர்த்தி, எம். எல். சி. "மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி" என்ற பொருள்பற்றிப் பேசினார். கல்வித்திட்டம் தேசீயமயமாக மாற்றப்படவேண்டிய அவசியத்தைப்பற்றியும், ஆசிரியருக்கு இத் திட்ட காலத்திலாவது வாழ்க்கைத் தரம் உயர்த்தவேண்டிய அவசியத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்.

சென்னை ஆசிரியர் சங்கம்

சென்னை ஆசிரியர் சங்கம் 12-11-1960-ல் கல்வி வாரம் கொண்டாடியது.

புரசை Sir M.Ct. முத்தைய செட்டியார் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. நரசிம்மன் கல்வியின் தரம் உயரவேண்டு மென்றும், ஒரு தாலுக்கா அல்லது பல தாலுக்காக்களுக்கு பத்து அனுபவமுள்ள ஆசிரியர்களின் குழு ஒன்று இது சம்பந்தமாகத் தேவையென்றும் சொன்னார்.

சங்கத் தலைவர் திரு.G. கிருஷ்ணமூர்த்தி, M.L C. ஆசிரியர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வருடம் மூன்றரைக் கோடி ரூபாய் வீதம் நிதி மூன்றும் திட்டத்தில் ஒதுக்கப் படவேண்டுமென வற்புறுத்தினார்.

ஹிந்து உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. T. S. ராஜகோபாலன், ஆசிரியர் மாணவர் விகிதம், மாணவரின் கட்டுப்பாடு, கல்வியின் தரம், நீதி, போதனை, மாணவரிடத்தில் ஆசிரியர் கொள்ள வேண்டிய அன்பு என்னும் விஷயங்களைப் பற்றி பேசினார்.

தலைமை தாங்கிய சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. M. R. பெருமாள் முதலியார் பயிற்சி பாடதிட்டத்தை மாற்ற வேண்டிய அவசியத்தைப்பற்றி பேசினார். வாழ்க்கையின் கஷ்ட நிலைகளைச் சமாளிப்பதற்கு வேண்டிய உழைப்பையும், மனோநிலையையும் பெற கல்விக் கூடங்களில் பயிற்சியளிக்க வேண்டுமென்றும் கூறினார்.

கடலைச் சுத்தம் செய்தல்

இன்று உலகிலுள்ள ஏழு கடல்களிலும் கப்பல்களின் போக்குவரத்து நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எத்தனையோ வகைக் கப்பல்கள்! அவற்றிலிருந்து வெளிப்படும் எத்தனையோ வகை எண்ணெய்கள் கடல் நீரை மாசுபடுத்துகின்றன. இதனால் ஏற்படக் கூடிய ஆபத்து விடாது அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இந்த ஆபத்தை முறியடித்து வெற்றிகாணும் நிலையை இன்று ஜெர்மன் விஞ்ஞானிகள் எட்டி விட்டார்கள், என்றால் நம்ப முடியாது தான். எண்ணெய்க் கலந்த கடல் நீர் பட்டு ஆயிரக்கணக்கான கடல் பறவைகள் செத்து மடிவது பற்றியும், செயலற்றுக் கடல் நீரில் மிதப்பது பற்றியும், பெரிய பெரிய மீன் கூட்டங்கள் அப்படியே இது போன்ற விஷப் படிவுகளால் இறந்து போவது பற்றியும் அவ்வப்போது செய்தி படிக்கிறோம். இதனால் பொது மக்களிடையே ஏற்படும் கலவரத்துக்கு எல்லையே கிடையாது. மடியவிருந்த இத்தகைய கடல் பறவைகளை எப்படி சில தீர மனிதர்கள் சரியான சமயத்தில் காப்பாற்றி, அவற்றின் இறக்கைகளிலிருந்து விஷ எண்ணெயை அகற்றி, அந்தப் பறவைகளை மீண்டும் சுயேச்சையாய் பறக்கவிட்டார்கள் என்பது பற்றியெல்லாம் அடிக்கடி படித்து மனம் தழுதழுக்கிறோம். துறைமுகப் பட்டணங்களின் கரைகளும், துறைகளும், நதிகளும் கப்பல் எண்ணெயால் மாசுபடுவது என்பது இப்போது ஒரு பயங்கரமான அளவுக்குத் தீவிரமாகிவிட்டது. கோடைப் பட்டணங்கள் பலவற்றுக்கு தமது வருங்காலச் சிறப்பு குறித்தே பயம் ஏற்பட்டது; உல்லாசப் பிரயாணிகள் வருவது நின்றுவிடுமோ, அதனால் தமது பொருளாதாரமே சீர்குலைந்து விடுமோ என்று அவற்றுக்கு கலவரம் மூண்டு விட்டது. கப்பல் எண்ணெயால் விஷம் பரவும் இந்தத் தீமையை முறியடிக்க சரியான ரசாயனப் பொருள் ஒன்று கண்டுபிடிப்பதற்கு எத்தனையோ நாடுகள் முயன்று வந்திருக்கின்றன. இந்த நோக்கம் இப்போதுதான் ஈடேறியிருக்கிறது. ஹாம்பர்க் பட்டணத்து மருந்து வியாபாரிகள் இரண்டு பேர் பல ஆண்டுக் காலம் பரிசோதனை நடத்திய பின் இப்போது வெற்றி பெற்றுவிட்டதாகத் தோன்றுகிறது; "ஆயில் ஸிங்க்" என்னும் பௌடர் ஒன்றை அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். பல்வேறு ரசாயன மண்களும், சிமென்ட் போன்ற பொருள்களும் கலந்த பௌடர் இது. கப்பல்களிலிருந்தோ, விமானங்களிலிருந்தோ இந்தப் பௌடரை, கடலில் எண்ணெய் பெருமளவில் மிதக்கும் இடங்களிலெல்லாம் தூவினால் போதும். உடனே அது எண்ணெயுடன் சேர்ந்து ஒரு கனப் பொருளாக மாறி, நீரில் அமிழ்ந்துவிடுகிறது. இதனால் எண்ணெய்ச் சுவடே இருப்பதில்லை. கடலில் உயிரியல் ஆராய்ச்சி நடத்தும் ஜெர்மன் நிலையங்களும், டென்மார்க் தேசத்து நிலையங்களும் விரிவாக ஆராய்ந்து பார்த்ததில், இந்தப் புதிய பௌடரால் பிராணிகளுக்கோ, தாவரங்களுக்கோ எவ்விதக் கெடுதலும் நேராது என்பது புலனாகியிருக்கிறது.

இந்தப் புதிய பௌடர் நார்வே தேசத்துக்குச் சீக்கிரமே பெருமளவில் தேவைப்படும் என்றுதெரிகிறது. ஆஸ்லோ கரைப் பகுதியில் இரண்டாவது உலகப் போரின் போது மூழ்கடிக்கப்பட்ட கனரக க்ரூஸர் கப்பல் ஒன்றை நீருக்கு மேலே கொண்டு வருவதற்கு இப்போது ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கப்பல் மேலே கிளப்பப்படும்போது, அதன் எண்ணெய் டாங்குகள் துரு காரணமாய் சேதப்படலாம்; அப்படி அவை சேதமடைந்து, அவற்றிலிருந்து எண்ணெய் வெளிப்படுமேயானால், கிட்டத்தட்ட 3,000 லிட்டர் அளவுக்கு எண்ணெய் நீரின் மேல் பரப்புக்கு வரலாம். இதனால் அந்தக் கடற்கரைப் பகுதி முழுவதும் இன்னும் பத்தாண்டுக் காலத்துக்கு விஷம் பரவிய பகுதியாக இருக்க நேரிடும். இதைக் கருதித்தான், புதிய பௌடரை ஆயத்தமாய் வைத்திருந்து, எண்ணெய் தென்பட்டவுடன் தூவுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்துக் கரைப் பகுதியில் அமைந்துள்ள தளம் ஒன்றில் இந்த "ஆயில் ஸிங்க்" பௌடரை முதன் முதலாக உபயோகித்துப் பார்த்ததில் பிரமாதமான நற்பலன் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தளத்தில், ஒரு சதுர கிலோ மீட்டர் நீர்ப் பரப்பில் ஒரு பெரிய எண்ணெய்ப் படிவு இருந்தது. அதன் மேல் இந்தப் பௌடரைத் தூவினார்கள். சில

நிமிஷங்களுக்குள்ளேயே கடல் தண்ணீரின் மேல் பரப்பு, எண்ணெய்ச் சுவடே இல்லாமல் தெளிந்துபோய்விட்டது.

உலகில் பிராணிகளிடம் பரிவு கொண்டுள்ளவர்களுக்கும், கடற்கரையின் கோடை வாசப் பட்டணங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்வோருக்கும், கப்பல் எண்ணெயால் கடல் தண்ணீர் மாசுபடுவது குறித்துப் பொதுவாகக் கவலைப்படும் எல்லாருக்குமே இந்தப் புதிய பௌடர் பற்றிய செய்தி பெருமகிழ்ச்சியளிப்பதாயிருக்கும் என்பது நிச்சயம்; ஏனென்றால் "ஆயில் ஸிங்க்" பௌடர் நம் யுகத்தில் மிகப் பெரிய, மிக அவசரமான பிரச்னைகளில் ஒன்றைத் தீர்த்து விடப் போகிறது.

—'இன்டரா'

அம்மானை

ஆடுகின்ற ஆட்டமெல்லாம் அம்மானைபோல் ஆமோ
பாடுகின்ற பறவையெலாம் கருங்குயில்போல் ஆமோ ?

மானைப் போன்ற கன்னியர்கள் மகிழ்வுடனே கூடி
வானைப் போன்ற வண்ணம்கொண்ட கண்ணன்புகழ் பாடி

பங்கயக் கரங்களிலே பந்துகளை எடுத்து
அங்கும்இங்கு மாகவோட அந்தரத்தில் விடுத்து

ஒன்றைப் பற்றி ஒன்றைவிட்டு உயரே ஒன்றை நிறுத்தி
கன்றைப் போலத் துள்ளித்துள்ளித் தாவி அதைப்பிடிப்பர்

அந்தரத்தை எட்டுதுபார் அழகியஎன் அம்மானை
இந்திரன்வா ழிடம்தேடி ஏகுதுபார் அம்மானை

பறவை போல ஓடியெங்கும் பறக்குது பார் அம்மானை
சுறவு போலப் பாய்ந்து கையைத் துளைக்குதுபார் அம்மானை.

—எச். வைத்தியநாதன்

பாண்டி

பாண்டி யாடு பாண்டி
பல்லி எித்தோன் ஆண்டி
தீண்டி னுலே போச்சு
தாண்டிவிட்டால் ஆச்சு.

ஓடு வைத்து மேவி
ஒற்றைக் காலால் தாவி
ஆடு வோமே வாரீர் !
அஞ்சு கோடு பாரீர் !

ஒன்றி ரண்டு மூன்று
ஓடி நாலில் நின்று
இன்று வெற்றி சூடி
இன்பு றுவோம் பாடி.

பழம் எடுத்தால் ஆச்சு
விழவி டுத்தால் போச்சு
தொழும் படியாம் பேச்சு
அழும் படியாம் ஏச்சு.

—எச். வைத்தியநாதன்

செய்தித் திரட்டு

சிவகிரி மையம் குழந்தைகள் தினவிழா

சிவகிரிமையத்திலுள்ள, பத்து ஆரம்பப் பள்ளிகளும் குழந்தைகள் தின விழாவை, விமரிசையாகக் கொண்டாடினர். விழாவிற்கு டாக்டர் திரு. லட்சுமண சாமி முதலியார் தலைமை தாங்கினார். அது சமயம், திரு. வரதராசன் அவர்கள் தேசீயக் கொடி ஏற்றி, ஊர்வலத்திற்குப் பின்னர், விளையாட்டு விழாவை திரு. சுப்ரமணியம் ஆரம்பிக்க, விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. அதன்பின், சிவகிரி பஞ்சாயத்து அதிகாரி அவர்களால் நேரு படத் திறப்பு விழா நடைபெற்று கூட்டம் ஆரம்பமானது. இறை இறைஞ்சலுக்குப் பின் திரு. இராச மாணிக்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசியபின், தலைவர் முன்னுரையாற்றினார். திரு. பொன்னுசாமி அவர்கள் "குழந்தை செல்வம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். கொடுமுடி பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி அவர்கள் பரிசு வழங்க, தலைவர் முடிவுரைக்குப் பின் திரு. வேலுமணி அவர்களால் நன்றி கூறப்பட்டு, வளர்நாட்டு வாழ்த்துப் பாடியபின், இனிப்பு வழங்கப்பட்டு, விழா இனிதே முடிந்தது.

திருச்சி தேசீய உயர்நிலைப் பள்ளி சாரணர் வார விழா

சேஷ ஐயங்கார் குழுவின் சார்பில் சாரணர் வார விழா நவம்பர் மாதம் 7–ஆம் தேதி முதல் 14-ஆம் தேதிவரை கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான்கள் டி. எஸ். சுந்தரராஜன், எஸ். அனந்த நாராயணன், எல். எஸ். மாத்ருபூதம், என். சுந்தரம், கே. ரெங்கராஜன் இவர்கள் சொற்பொழிவாற்ற முறையே பிராணிகள் தினம், ஸ்தாபகர் தினம், சுகாதார தினம், வீரர்கள் தினம், மரியாதை தினம் கொண்டாடப்பட்டது.

பள்ளித்தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் ஆர். பூவராகன், எம்.ஏ., எல்.டி. அவர்கள் இறுதி நாள் அன்று விழாவினைச் சிறப்பித்தார்.

14-11-60 அன்று காலை 8 மணிக்கு நேரு பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அது சமயம் டி. எஸ். சுந்தரராஜன் "நேருவின் குழந்தை உள்ளம்" என்பது பற்றி பேச, தலைமை ஆசிரியர் ஆர். பூவராகன், எம்.ஏ., எல்.டி. சாரணர்களுக்கு இனிப்பு வழங்க, கூட்டம் தேசீய கீதத்துடன் முடிவடைந்தது.

திருச்செந்தூர் தாலுக்கா ஆரம்பப்பள்ளிக்கூட ஆசிரியர் யூனியன்

திருச்செந்தூர் தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் யூனியனின் நிருவாகக் கமிட்டிக் கூட்டம் 12-11-60 அன்று திருச்செந்தூர் ஸ்ரீ சரவண ஐயர் பள்ளியில் யூனியன் தலைவர் திரு R. M. கணபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசாங்கம் பிறஆசிரிய ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்பட்டது.

1. புதிய சம்பளத்திட்டத்தில் நெடு நாட்களாக வேலை பார்த்துவரும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வுபற்றி எதுவுமே குறிப்பிடவில்லை என்பது பற்றி இந்த யூனியன் வருந்துகிறது. உதாரணமாக G. O. 2033ன்படி 1-6-60ல் வேலைக்கு வந்த ஒரு ஆசிரியரும் பலஆண்டுகளுக்கு முன்னரே வேலை பார்த்துவரும் ஒரு ஆசிரியரும் ஒரே சம்பளம் பெறுவர் [1-6-60 முதல் இருவருக்கும் ரூ. 90 + 10] ஊக்கத்துடன் இப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனுபவமிக்க ஆசிரியர்களுக்கு இது பெரும் ஏமாற்ற மாகும். இதனை மாற்றி G. O. M. S. 710ல் கூறியபடி ஆசிரியர்களுக்கு அவர்களது சர்வீஸுக்குத்தக்க ஊதிய உயர்வு அனுமதிக்க வகைசெய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

2. அத்தகைய ஊதிய உயர்வுக்கு இது முன் கடைசி சம்பள விகித காலத்தை கணக்கிடாமல் தற்போதய கிரேடில் அவரது ஊதிய காலத்தைக் கணக்கிட எடுத்துக்கொள்ளவேண்டும்.

3. ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதித்துள்ளதைப்

போல அலவன்ஸ் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறது.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலே

ஆதாரக் கல்வி நடைமுறையிலிருப் பதைப் பார்வையிட்டு தங்கள் மாகாணத் திலும் அதைச் செம்மையாகப் பின்பற் றுவதற்குரிய நடைமுறைகளை நேரில் தெரிந்துகொண்டு போவதற்காக ஆந் திரப் பிரதேசத்திலிருந்து முன்னாள் அமைச்சர் உயர்திரு. எக்கபார்டி அவர் கள் தலைமையில் எம்.எல்.ஏ., எம்.எல்.சி., பிரின்சிபால் ஆகியோர்கள் பதினொரு பேரைக் கொண்ட ஒரு கமிட்டி 11-11-60 அன்று வாலாஜாபாத்திற்கு வந்தது. செங்கற்பட்டு மாவட்டக் கல்வி அலுவலர் உயர்திரு. டான் ஜோசப் அவர்கள் அவர்களை அழைத்து வந்தனர். இந்து மத பாடசாலையின் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் யாவரையும் வரவேற்று, உபசரித்து யாவற்றையும் உடனிருந்து காட்டினர்.

உயர்திரு. எக்கபார்டி அவர்களுக்கும் ஏனையோர்களுக்கும் பாடசாலையின் ஆசி ரியர்களும், சாரணர்களும், குருளையர்க ளும், விரதச்சாரி அணியினரும் அணி வகுப்பு முதலியவற்றை நடத்தி வரவேற்ற பின், மாணவர் இல்லம், தொழிற்சாலை, பாடசாலை ஆகிய மூன்றும் தனித்தனி அமைந்திருப்பதையும் ஆங்காங்கு மாணவர்கள் பெற்றுக்கொண்டிருக்கும் பயிற்சிகளையும் கண்டார்கள். ஆதாரக் கல்வியின் முக்கிய பகுதியான சமூக வேலைகளை மாணவர்களே மகிழ்ச்சியு டன் செய்வதைக் கண்டார்கள். மாண வர்கள் எல்லா இடங்களையும் துப்புரவாக வைத்துக் கொள்வதையும் மல அறை துப்புரவு செய்ததையும், ஒருவருக்கொரு வர் முடிவெட்டிக் கொண்டதையும் தங் கள் உணவு தயாரிப்பதற்காகக் காய்கறி நறுக்கிக் கொடுப்பதையும், தண்ணீர் கொண்டு வருவதையும், 850 பேரும் ஒன்ருக உட்கார்ந்து வழிபாடு செய்யும் பெரிய வழிபாட்டுக் கூடத்தையும், தொழிற்சாலையில் தச்சு, அச்சு, அலுமி னியம், நெசவு முதலிய வேலைகள் செய் வதையும் கண்டார்கள். மாணவர்கள் நூற்பு நூற்பதும், ஆதாரப்பயிற்சிக்காக அவர்கள் தயாரித்து வைத்திருந்த கைப் புத்தகங்களும் பிறவும் அவர்களை மகிழ் வித்தன.

பாடசாலையில் நடந்த கூட்டத்தில் மாணவர்கள் கிராமிய நடனங்களும், பொய்கால் குதிரை, கரகம், காவடி, புலி, யோகாசனம், கோபுரங்கட்டல் முதலிய வைகளும் காட்டப்பெற்றன. பின்னர் திருமதி அம்மண்ணராஜு அவர்கள் தமி ழில் பேசினர்: 'இந்துமத பாடசாலை குழந்தைகளுக்காகச் செய்து வரும் வேலையை நேரிற்பார்க்க வந்தோம். இங் குத் தெரிந்துகொண்ட பல செய்திகள் ஆந்திர மாகாணப் பாடசாலைகளில் கை யாளுவோம்' என்று கூறி இவ்வளவு உயர்ந்த முறையில் பாடசாலையை நடத் துபவர்களைப் பாராட்டினர்.

தலைவர் அவர்கள் தம் முடிவுரையில் பின்வருமாறு கூறினர்:—'தமிழ் நாட் டின் தலைசிறந்த பாடசாலையாக இந்துமத பாடசாலை நடைபெறுகிறதைக் கேள்விப் பட்டோம். இதைப் பார்த்துக் கொண்டு போய் ஆந்திரா மாகாணத்திலுள்ள பாட சாலைகளில் இம்முறைகளைப் புகுத்து தற்கு ஆந்திர அரசாங்கம் அனுப்ப நாங் கள் வந்தோம். இதுவரை நாங்கள் பல பாடசாலைகளைப் பார்த்தோம். இதைப் போல் மாணவர்களுக்கும் தாய் நாட்டிற் கும் பயன்படும் முறையில் நடைபெறும் பாடசாலை வேறு நாங்கள் காணவில்லை. பாடசாலையை நடத்துபவர்களும் ஆசிரி யர்களும் மிகுந்த அக்கரையோடு இங்கு வேலை செய்கிறார்கள். இத்தகைய பாட சாலைகள் பல ஏற்படுவது நல்லது. நாங் கள் இங்கு வந்ததால் எங்கள் மாகாணத் திற்கு நன்மை ஏற்படும் என்று நம்பு கிறோம். இப் பாடசாலை நீடுவாழ்க'!

புதுச் சம்பளத் திட்டம்

தனி ஆசிரியருக்குப் புதுச் சம்பளத் திட்டத்திஞல் பிரச்னைகள் ஏற் பட்டால், தென் இந்திய ஆசிரியர் சங்கத்திற்கு எழுதவும்.

சென்னை ஆசிரியர் சங்க நிர்வாகக் குழுவினால் 2—12—1960-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. This Council requests the Government to take for purposes of weightage the total service of a Teacher, as is taken for purposes of pension, irrespective of the cadres in which he might have served and the grades of institutions and the different agencies he might have served under, as otherwise weightage will be of practically no use to many Teachers.

2. This Council requests the Government to liberalize the rate of increment in the second slab to Rupees eight in the case of Secondary Grade Teachers, consistent with the principle followed in respect of all other grades.

3. This Council reiterates its previous resolutions in respect of Teachers retrenched from Aided elementary schools in June 1959 and urges on the Government the need :

   (i) to pay salaries for the period of break in their service ;

   (ii) to give secondary grade posts to such of the Secondary Grade Teachers as have been placed on the Higher Grade under the Corporation of Madras ;

   (iii) to continue their Provident Fund accounts and to pay vacation salary for such period as has been withheld in respect of such Teachers.

4. This Council reiterates its resolution No. 7 dated 8-9-1960 and urges on the Government the need to pay the Teachers as per entries in their Service Registers.

5. This Council requests the Government to liberalise the rate of increment to Rupees three in the case of Lower and Higher Grade Teachers.

6. This Council thanks the Government for amending the Pension Rules, removing the insistance on service on the crucial dates, in respect of superannuated Teachers.

7. This Council appeals to the Government to sanction, in the case of all Teachers under all Agencies, this year's increment dues in addition to the benefits under the Revised Scales, as, in the Teaching Profession, increments mostly fall due in June and the pay on 31st May that is taken for fixation of Revised Scales cannot include such earned increment.

ஆரம்ப ஆசிரியர் திரளாக வருக !

தென் இந்திய ஆசிரியர் சங்க

விசேஷ மகாநாடு

தஞ்சை கரந்தை தமிழ் சங்கப் பள்ளியில்

30—12—1960 *வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது*

பிரதிநிதி கட்டணம் கிடையாது

தென் இந்திய ஆசிரியர் சங்க நிர்வாக போர்டில் 8—10—1960-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. This Board requests the Government to make statutory provision through the Elementary and the Secondary Education Acts for Security of Service of Teachers in Aided Institutions on a par with Teachers in Government service.

2. This Board requests the Government to make eligible for pension Teachers during their period of re-employment after retirement as in the case of retired Government servants under re-employment.

3. This Board requests the Government to treat all posts occupied by Secondary Grade Teachers in the various elementary schools under the various Agencies as Secondary Grade Posts, in order to enable all such Teachers to get the full benefits of the recommendations of the Pay Commission as accepted by the Government.

4. This Board requests the Government to pay the Teachers of Aided elementary schools that were retrenched in June 1959 on account of the policy of the Government with regard to the classification of such schools as fee-levying and non-fee-levying, for the period of the break in their service.

5. This Board regrets that the Government have not agreed to recognise the entries in the Service Registers (with regard to salary) of Teachers in aided elementary schools who were paid by the Government direct for a year from June 1959, and requests the Government to re-consider the order and pay the Teachers as per the entries in their Service Registers.

6. This Board requests the Government to liberalise the Provident Fund Rules for Teachers in Non-pensionable service to enable Teachers to get loans for any reasonable purpose.

7. This Board requests the Government to grant pension to all living retired Teachers.

8. This Board requests the Government to amend the Provident Fund Rules with regard to Teachers in non-pensionable service to suit the New Coinage and permit Teachers to contribute ten naye paise in the rupee.

தஞ்சை ஜில்லா ஆசிரியர் சங்கம்

பொன் விழா

31—12—1960 தஞ்சையில்

நடைபெறுகிறது

GOVERNMENT ORDER

GOVERNMENT OF MADRAS

Education and Public Health Dept.
G.O. (Ms.) No. 2386 Education
dated 14th November 1960.

(Abstract)

EDUCATION — Teachers' Pension Scheme — Rule 9 of the Pension Rules — Second proviso — Amended.

READ :

G. O. No. 2079 Education Dt. 25-11-'58
G. O. No. 1834 Education Dt. 7- 9-'59
G. O. No. 964 Education Dt. 11- 5-'60
G. O. No. 1778 Education Dt. 18- 8-'60
From the Director of Public Instruction No. 2906 B10/60 dated 16-7-'60.

ORDER :

The Government approve of the proposal of the Director of Public Instruction that a trained teacher, who had attained the age of Compulsory retirement prior to 1-4-'55 but was actually in service in the same or in any other school on or after 1-4-'55, be made eligible for pension.

2. The appended notification will be published in the Fort St. George Gazette.

3. This order issues with the concurrence of the Finance Department — vide their U. O. No. 114619/Pen/60-1 dated 1-11-'60.

(By order of the Governor)

T. P. KOTHANDARAMAN,
Deputy Secretary to Govt.

Appendix

1. In the Madras Teachers' Contributory Provident Fund Insurance Pension Rules, for the word and figures "on 1-4-'55" occurring in the second proviso to rule 9 of the pension rules, the words and figures "on or after 1-4-'55' shall be substituted.

2. The second proviso referred to above shall be renumbered as third proviso.

3. The amendment in para 1 above shall be deemed to come into force from 1-4-'55.

(Sd.) K. BALAGOPALAN,
Superintendent.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. and Published by Sri S. D. Krishnamurthi Rao, B.A., L.T., for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1